# கடலூர்
# அரசு அருங்காட்சியகக் கையேடு




ஆசிரியர்

ரு. தே. துளசி பிருந்தா

காப்பாட்சியர்

அரசு அருங்காட்சியகம், கடலூர்.



வெளியிடுபவர்

அருங்காட்சியகங்களின் ஆணையர்

அரசு அருங்காட்சியகம், சென்னை–600 008.

11924

# அருங்காட்சியகக் கையேடு
# கடலூர்

11924

ஆசிரியர்
**ரு.தே. துளசி பிருந்தா**
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், கடலூர்.

புதிய தொடர்ச்சி – பொதுப்பகுதி – மாவட்டம் – தொகுதி ,1 – 1997

வெளியிடுபவர்
அருங்காட்சியகங்களின் ஆணையர்,
அரசு அருங்காட்சியகம், சென்னை – 600 008.

முதற் பதிப்பு :\ 1997

©
ஆணையர்
அரசு அருங்காட்சியகங்கள்

விலை ரூ :

அருங்காட்சியகக் கணிப்பொறி பிரிவு,
சென்னை—600 008.

**கண். தீனதயாளன், இ.ஆ.ப.,**
**அருங்காட்சியகங்களின் ஆணையர்**

அரசு அருங்காட்சியகம்,
சென்னை – 600 008.

# அணிந்துரை

தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கும் அருங்காட்சியகங்களின் தலைமை இடமாக சென்னை அரசு அருங்காட்சியகம் செயல்பட்டு வருகிறது. சில வருடங்களுக்கு முன் வரை அரும்பொருட்களின் உறைவிடமாக இருந்த அருங்காட்சியகங்கள் தற்போது சிறந்த கல்வி நிறுவனங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. கலை மற்றும் கல்வி சம்பந்தப்பட்ட பொருட்களை சேகரிப்பது, பாதுகாப்பது, கண்காட்சிகள் வைப்பது, ஆராய்ச்சிகள் மேற்கொள்வது ஆகிய பணிகள் அருங்காட்சியகத்தின் முக்கிய பணிகளாகக் கருதப்படுகின்றன. பொதுமக்களும், மாணவர்களும் அருங்காட்சியகங்களினால் பயன்பெறுவது கண்டு மாவட்டந்தோறும் அருங்காட்சியகம் அமைக்கலாம் என்ற நோக்கில் மாவட்ட அருங்காட்சியகங்கள் துவக்கப்பட்டன. இவ்வரிசையில் தென்னாற்காடு – வள்ளலார் மாவட்ட அருங்காட்சியகம் 8 – வது மாவட்ட அருங்காட்சியகமாக 1989 நவம்பர்த் திங்களில் துவங்கப்பட்டது.

ஒவ்வொரு மாவட்ட அருங்காட்சியகத்திலும் தொல்பொருளியல், மானிடவியல், கலை, நாணயவியல், தாவரவியல், விலங்கியல், புவியியல் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த காட்சிப்பொருட்கள், குறிப்பாக, பெரும்பாலானவை அந்த மாவட்டத்தைச் சார்ந்தவை, காட்சிக்கு வைக்கப்படுகின்றன. தென்னாற்காடு–வள்ளலார் மாவட்டத்தின் சிறப்பு பற்றியும் கடலூர் அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பொருட்கள் பற்றியும் இக்கையேடு விளக்குகிறது.

இக்கையேட்டின் ஆசிரியர் திருமதி ரு.தே. துளசிபிருந்தா, தற்பொழுது கடலூர் மாவட்ட அருங்காட்சியக காப்பாட்சியராக செவ்வனே பணிபுரிகிறார். இவரது பங்கும் இவ்வருங்காட்சியக முன்னாள் காப்பாட்சியர்கள் திருமதி. இரா. சாந்தி, முனைவர். நீ. சங்கரநாராயணா, திருவாளர்கள் எம். காந்தி, ஆர். பாலசுப்பிரமணியன், ஜா.ரா. அசோகன், ம.மோகன், ஆகியோரது பணியும் குறிப்பிடத்தக்கது.

இக்கையேடு பார்வையாளர்கள் அனைவருக்கும் குறிப்பாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவர், மாணவிகளுக்கு நல்ல பயனளிக்கும் என நம்புகிறேன்.

30. 4.1997. கண். தீனதயாளன்

## அருங்காட்சியகம்

கல்வி வளர்ச்சிக்கும், ஆராய்சிக்கும் உரிய இடமாகவும் கலைகளை வளர்க்கும் இடமாகவும் அருங்காட்சியகங்கள் திகழ்வதால் இதனை கலை தேவதைகளின் இருப்பிடம் எனவும் கூறலாம்.

மாவட்டத்திற்கு ஓர் அருங்காட்சியகம் என்ற நமது அரசின்கொள்கைக்கு ஏற்ப 8 – வது மாவட்ட அருங்காட்சியகமாக தென்னாற்காடு மாவட்டத்தில், கடலூரில் இவ்வருங்காட்சியகம் அமைந்தது இம் மாவட்டத்திற்கு சிறப்பு சேர்ப்பதாகும்.

## தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம்

ஆன்மீக திருத்தலங்களுடன் அறிவுசால் பெருங்குடிமக்கள் அவதரித்த புண்ணிய பூமியால் சன்மார்க்க நெறியின் சங்கமாகவும், ஆயகலைகளின் கலங்கரை விளக்கமாகவும் விளங்கி, தமிழ்த்தாயின் மணிமகுடத்தில் மாணிக்கமாய் சுடர்விட்டு ஒளிதரும் அளவில் பெரிய மாவட்டம் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம். பச்சை வயல்களையும், பரந்த கடலையும் தன்னகத்தே கொண்டு, வேளாண் பெருமக்களையும், உதிரத்தை வியர்வையாய் உமிழும் உழைப்பாளிகளையும் கடும் காற்றை எதிர்க்கொண்டு, கலம் ஏந்தி வலம் வந்து மீன் பிடித்து வாழும் மீனவ பெருங்குடி மக்களையும் பெருவாரியாகக் கொண்டதாகும்.

பிரிக்கப்படாத தென்னாற்காடு மாவட்டம், தமிழ்நாட்டிலேயே அதிக பரப்பளவு கொண்டது. இம்மாவட்டம் கிழக்கில் வங்கக் கடலையும், தெற்கில் தஞ்சை, திருச்சி மாவட்டங்களையும், மேற்கில் சேலம் மாவட்டத்தையும் வடக்கில் செங்கை எம்.ஜி.ஆர் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களையும் எல்லைகளாகக் கொண்டது.

வரலாறு, சமயம், சமூகசீர்திருத்தம், தொழில், வேளாண்மை ஆகிய பல துறைகளில் உயர்ந்த இடத்தினைப் பெற்று விளங்குவது தென்னாற்காடு மாவட்டம் ஆகும். பல்லவப் பேரரசுகள், ஆற்காடு நவாபுகள், ஆங்கிலேயர் என இதன் வரலாற்றுச்சுவடுகளில் வலம் வந்த அரசுகள் பலவாகும்.

புனித செயின்ட் டேவிட் கோட்டை, சுற்றிலும் அகழி, ஆர்ப்பரிக்கும் அலைகடலோரம் உயர்ந்த கட்டிடங்கள், இராபர்ட் கிளைவ் அவர்களின் இல்லம், பரந்த பெரிய மஞ்சை நகர் மைதானம் ஆகியவை இம்மாவட்டத்தின் தலைநகரமான கடலூரின் சிறப்புக்குச் சான்று பகர்பவை.

சமயத்துறையில் சைவ, சமயக் குரவர்கள் நால்வருள் இருவரான திருநாவுக்கரசரும், சுந்தரரும் இந்த மாவட்டத்தில் தோன்றியவர்கள். நாவுக்கரசரின் தமக்கை திலகவதி அம்மையார், மெய்கண்டார் ஆகியோரும் சமயச் சீர்திருத்தம் கண்டு எம்மதமும் சம்மதம் என்ற கருணை வள்ளல் இராமலிங்க அடிகளும் இங்கு தோன்றியவர்களே. இங்கு கல்விக்கடலாக விளங்கிய திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளை எவரும் மறக்க முடியாது.

உலகத்தவர்களுக்கு அச்சாணியாகிய உழவே இம்மாவட்டத்தின் முதன்மைத் தொழில். நெல், கரும்பு, வாழை முதலிய நன்செய் பயிர்களும், மணிலா முந்திரி ஆகிய பணப் பயிர்களும் இம்மாவட்டத்தில் விளைகின்ற முக்கிய பயிர்களாகும். பண்ருட்டியில் விளையும் இன்சுவைப் பலாவின் அருமை அனைவருக்கும் தெரிந்ததாகும். பையேந்தி நிற்கும் பணக்கார நாடுகள் இம்மாவட்ட முந்திரிக்குக் கையேந்தி நிற்கின்றன. இங்கிருந்து முந்திரி அமெரிக்கா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, ஹாங்காக், சிங்கப்பூர், துபாய், சவுதி ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மலை நிலங்களைவிட இம்மாவட்டத்தில் விளை நிலங்களே மிகுதியானவை.

தொழில் துறையில், நெய்வேலி நிலக்கரி நிறுவனம் இம்மாவட்டத்தின் சிறப்புக்குச் சான்றாகும். இங்கு உற்பத்தி செய்யப்படும் அனல் மின்சாரம் நாட்டின் இருளை நீக்குகிறது. இம்மாவட்டத்தில் பல இடங்களில் கனிம வளங்களும், பெட்ரோல் போன்ற எரிசக்திகளும் மண்ணுக்குள் புதைந்து கிடக்கின்றன.

ஆங்கிலேயர் காலத்தில் தொடங்கப்பெற்று, இன்று வரை இயங்கும் நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையும், அதன் பின் பல சர்க்கரை ஆலைகளும் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளன. கடலூருக்கு அண்மையிலுள்ள சிப்காட் தொழிற்பேட்டையில் பல வேதியியல் தொழில் கூடங்கள் விண்ணுயரக் காட்சி தருகின்றன. பல சிறுதொழில்களும் இம்மாவட்டத்தில் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

சாதியும், சமயமும் பொய் என ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி கண்ட வள்ளலாரிடம் குன்றாத பற்றுகொண்ட ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் இந்த மாவட்டத்தில் தோன்றிய சன்மார்க்க அன்பர். இவர் தமிழகத்தின் முதல் முதலமைச்சராக விளங்கித் தொண்டாற்றியவர். பிற்படுத்தப்பட்ட சமூக வழிகாட்டியான திரு. எஸ். எஸ். இராமசாமி படையட்சியார் இங்கு தோன்றி அரசியல் தொண்டாற்றியவர். இதன் காரணமாகவே, விழுப்புரத்தை தலைநகமாகக் கொண்ட பதிய மாவட்டத்திற்கு இவரது பெயர் வைக்கப்பட்டுள்ளது. கல்வி, கள்ளுண்ணாமை இவற்றை வலியுறுத்திய ஆதனூர் நந்தனாரும் தில்லையில் வாழ்ந்த சீர்திருத்தச் செம்மல் சுவாமி சகஜாநந்தாவும் இம்மாவட்த்தில் போற்றத்தக்கவர்கள்.

இம்மாவட்டம் வரலாறு, சமயம், கல்வி, உழவுத் தொழில், வாணிபம் எனப் பல துறைகளிலும் மேம்பட்டு விளங்குகிறது. இம்மாவட்டத்தில் தான் அக இருளை நீக்கி ஒளி வழி காட்டிய வள்ளலார்வாழ்ந்த வடலூரும், புற இருளை நீக்கி மின் ஒளி வழங்கும் நெய்வேலியும் அருகருகே உள்ளன. சிதம்பரம், திருக்கோயிலூர்,

திருவெண்ணைநல்லூர், திருப்பாதிரிப்புலியூர், திருவந்திபுரம் முதலிய திருத்தலங்கள் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளன. பண்ணார் தமிழ் வளர்த்த அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இம்மாவட்டத்தில் உள்ள சிதம்பரத்தில் அமைந்து கல்விப் பணியாற்றுவதில் முதலிடம் வகிக்கிறது. இம்மாவட்டத்தில் திண்டிவனத்திலிருந்து திருவண்ணாமலை மார்க்கத்தில் 25 கி.மீ. தொலைவில் எழுந்து நிற்கும் மலை மீது விண்தொட நிமிர்ந்து நிற்கின்ற 700 ஆண்டுகளுக்கு முந்தைய ராஜா தேசிங்கு ஆண்ட செஞ்சிக் கோட்டை இன்றும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கின்றது.

இவ்வாறு பல வகைகளிலும் சிறப்பும், உயர்வும் பெற்ற இம்மாவட்டம் 1993–செப்டம்பர் 30ம் தேதி முதல் நிர்வாக வசதிக்காகவும், மக்கள் நலனுக்காகவும் எளிதில் மாவட்ட அரசு அலுவலகங்களை மக்கள் அடைந்து நன்மை பெறும் பொருட்டு இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒன்று கடலூரைத் தலைமையிடமாகக் கொண்ட தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் எனவும், மற்றொன்று விழுப்புரத்தை தலைமையிடமாகக் கொண்ட இராமசாமி படையாட்சியார் மாவட்டம் எனவும் பெயரிட்டு அழைக்கப்படுகின்றன. ஆனால், மாவட்டங்கள் பிரிக்கப்பட்டாலும் கடலூர் அரசு அருங்காட்சியகம் இரு மாவட்ட பொறுப்புகளையும் தன்னகத்தே கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

## அரசு அருங்காட்சியகம், கடலூர்.

**1986 – ஆம் ஆண்டு முதல் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்தின் தலைநகரமாகிய கடலூரில் மாவட்ட ஆட்சியரின் அலுவலக வளாகத்தில் அருங்காட்சியக அலுவலகம் செயல்பட்டது. 1989 – ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அருங்காட்சியகம்** அமைக்கப்பட்டு பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

அருங்காட்சியகத்தின் முன்புறத்தில் [வெளிச் சுவற்றில்] டயனோசரஸ் என்ற அற்றுப்போன மிகப்பெரிய விலங்கின் கண்ணாடி இழைகளால் ஆன 3 மீட்டர் உயர மாதிரி உருவம் பதித்து வைக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் கி.மு. 3 – ஆம் நூற்றாண்டு முதல் இந்நூற்றாண்டு வரை தமிழ் எழுத்து வளர்ச்சி எழுதப்பட்டுள்ளது.

அருங்காட்சியகத்தின் சிற்பப்பூங்காவில் பல கற்சிற்பங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

1. போர் வீரன் :

இச்சிலை கி.பி.18 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. போர் வீரனின் இடது கையில் வில்லும் வலது கையில் அம்பும் காணப்படுகின்றன. கம்பீரத்தோற்றத்துடன் போர் புரியத் தயார் நிலையில் நிற்பது போல் இச்சிலை காணப்படுகிறது.

2. சூரியன் :

இச்சிலை கி.பி. 18 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. சூரியனின் இடது மற்றும் வலது கைகளில் தாமரை மலர்கள் காணப்படுகின்றன. தலையில் கிரீடம் காணப்படுகின்றது. அதன் பின்புறத்தில் பிரபையும் காணப்படுகிறது. இச்சிலை பரசுரெட்டிபாளையம் கிராமம், விழுப்புரம் மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

3. ஸ்ரீதேவி :

இச்சிலை கி.பி. 12 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இடது கையில் தாமரை மலர், வலது கை கீழே தொங்குகிறது. கரந்த மகுடம் காணப்படுகிறது. இச்சிலை கருவேப்பலங்குறிச்சி, விருத்தாசலம் வட்டம் , தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

4. சண்டிகேஸ்வரர் :

இச்சிலை கி.பி. 10 – ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இச்சிலையில் வலது கால் மடித்தும், இடது கால் கீழே தொங்கும் நிலையிலும் உள்ளது. வலது கையில் கோடாரி காணப்படுகிறது. இடதுகை இடதுதொடையின் மேல் வைத்து, சிலை அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. இச்சிலைச் சோழபுரம், வேலூர் வட்டம் வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

5. திருமால் :

இச்சிலை கி.பி 12 – ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இச்சிலை 4 கைகளுடன் நிற்கும் நிலையில் உள்ளது. வலது மேல் கையில் சக்கரமும், இடது மேல் கையில் சங்கும் காணப்படுகின்றன. வலது கீழ்க் கை ஆசி வழங்கும் நிலையிலும் இடது கீழ் கை இடது தொடையின் மேல் வைத்து இச்சிலை நிற்கும் நிலையில் காணப்படுகிறது. இச்சிலை கொல்லிமலை, மேல்பாதி கிராமம், காட்டுமன்னார் கோவில் வட்டம், தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

6. சிவலிங்கம், நந்தி :

இச்சிலைகள் சோழர் காலத்தைச் சார்ந்தவை. சிவலிங்கம் தாமரை பீடத்தின் மேல் காணப்படுகிறது. நந்தியின் முகம் சேதமடைந்துள்ளது. நந்தி அழகிய மணிகளைக் கொண்டு அலங்காரம் செய்யப்பட்டு காணப்படுகிறது. இச்சிலைகள் கருப்பேரி கிராமம், காட்டு கோவில் வட்டம், தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

7. குரங்கு சிலைகள் :

சிற்பப் பூங்காவில் நான்கு குரங்கு சிலைகள் உள்ளன. இவை கி.பி. 18 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இச்சிலைகள் மண்டபத்தின் பகுதிகளாக இருந்திருக்கலாம் என கருதப்படுகிறது.

குரங்குகள் கால்களை மடித்து அமர்ந்த நிலையில் காணப்படுகின்றன. இச்சிலைகள் தென்னாற்காடு மாவட்ட தலைநகரமாகிய கடலூரில் உள்ள மாவட்ட கருவூல அலுவலக வளாகத்தில் இருந்து சேகரிக்கப்பட்டன.

அருங்காட்சியகத்தின் முகப்பில் 1.70 மீட்டர் உயரமுள்ள கண்ணாடி இழைகளால் ஆன காளியின் மாதிரி உருவம் அமைக்கப்பட்டுள்ளது. இது கி.பி. 13 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

## அறிமுகக் கூடம்

இக்கூடத்தில் பண்ருட்டி வட்டத்தில் உள்ள திருவதிகை வீரட்டனேஸ்வரர் கோயிலில் உள்ள புத்தர் சிலையின் நிழல் படமும், பிச்சாவரத்தின் எழில் மிகுந்த நிழல் படமும் வைக்கப்பட்டுள்ளன. விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் உள்ள புகழ்மிக்க செஞ்சிக்கோட்டையின் நிழல் படமும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## சிற்பக் கூடம்

இக்கூடத்தில் 9 – ஆம் நூற்றாண்டு முதல் 18 – ஆம் நூற்றாண்டு காலத்தைச் சார்ந்த பல கற்சிலைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம்; பல்லவர், சோழர் மற்றும் நாயக்க மன்னர்களால் ஆட்சி நடத்தப்பட்ட இடம். எனவே இங்கு பெரும்பாலும் நிறைய சிலைகள் புதை பொருளாக இன்றும் கிடைக்கின்றன. இக்கூடத்தில் உள்ள கற்சிலைகளின் விபரங்களை இனி காண்போம்.

ஏழு கன்னியர்கள்:

வரலாற்றில் தாயின் சக்திக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மாபெரும் சக்தியை ஆதிமுதல் தாய் வடிவிலேயே வழிபட்டு வந்தனர். கிராம மக்கள் வழிபடும் பெண்தெய்வங்களை யோனிகள் என்று குறிப்பிடுவார்கள். ஒவ்வொரு திசையிலும் ஒவ்வொருயோனி இருப்பதுண்டு. ஆதிகாலம் முதல் கிராம தேவதைகளை உக்கிர சொரூபிகளாகவே வழிபட்டு வருகின்றனர். இந்த அம்மன் சொரூபங்கள் ஏழு அல்லது எட்டு இருப்பதுண்டு. இவர்களை ஏழு கன்னியர்கள் அல்லது சப்தமாதர்கள் என்றும் அஷ்டகன்னிமார்கள் எனவும் அழைப்பார். இவர்கள் பிராமி, மகேஷ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராஹி, இந்திராணி, சாமுண்டி ஆகியோர் ஆவர்.

இங்கு வைஷ்ணவி, வராஹி, பிராமி, கௌமாரி ஆகிய கற்சிலைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை சோழர் காலத்தைச் சார்ந்தவை எனக் கருதப்படுகிறது.

சுப்ரமணியர்:

இச்சிலை கி.பி. 12 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. வலது மேல் கையில் சக்தி [ஆயுதம்] இடது மேல் கையில் வச்சிரம் காணப்படுகிறது. வலது கீழ்க்கை ஆசி வழங்கும் நிலையுடன் இடது கீழ்க்கை இடுப்பின் மேல் காணப்படுகிறது. முருகனின் வாகனமாகிய மயிலும் காணப்படுகிறது. இச்சிலை காட்டுமன்னார் கோயில் வட்டம் தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

பைரவர்:

இச்சிலை கி.பி. 14 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. வலது மேல் கையில் உடுக்கை காணப்படுகிறது. இடது மேல்கை உடைந்துள்ளது. வலது கீழ்கை சூலத்தையும் இடது கீழ்கை கபாலத்தையும் ஏந்தியுள்ளது. இச்சிலை சத்தியமங்கலம், விழுப்புரம் மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

தட்சிணாமூர்த்தி:

இச்சிலை கி.பி. 12 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. பீடத்தின் மேல் அமர்ந்த நிலையில் இருக்கும் இந்நிலையின் இடதுகால் மடித்தும் வலதுகால் கீழே தொங்கிய நிலையில் உள்ளது. மேல் கைகளில் மலரும் அங்கமாலையும் காணப்படுகின்றன. வலது கீழ்கை யோக முத்திரையுடனும் இடதுகை தொடையில் வைத்த நிலையிலும் காணப்படுகின்றது. இச்சிலை சிதம்பரம் வட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

நவநீதகிருஷ்ணன்:

இச்சிலை கி.பி. 18 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. வலதுகையில் வெண்ணைய் உருண்டையும், இடது கை மேலே தூக்கி நடனமாடும் நிலையில் உள்ளது. இடதுகால் பீடத்தின் மேலும் வலதுகால் பீடத்தின் மேல் உள்ள சிறு மலரின் மேலும் உள்ளது. இச்சிலை கடலூர் வட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

வைஷ்ணவி:

சப்த கன்னியர்களில் ஒருவரான வைஷ்ணவி திருவுருவங்கள் மூன்று இங்கு காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. இவை சோழர் காலத்தைச் சார்ந்தவை எனக் கருதப்படுகிறது. இச்சிலைகள் சிதம்பரம் வட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

சூரியன்:

இச்சிலை கி.பி. 18 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. சூரியனின் இடது மற்றும் வலது கைகளில் தாமரை மலர்கள் காணப் படுகின்றன. தலையில் கிரீடமும் பின்புறத்தில் பிரபையும் காணப் படுகின்றது. இச்சிலை வட ஆற்காடு மாவட்டத்தில் இருந்து கிடைத்துள்ளது.

வீரபத்திரர்:

இச்சிலை கி.பி. 17 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. நான்கு கைகளிலும் ஆயுதங்களை ஏந்தி, கம்பீரத் தோற்றத்துடன் இச்சிலை காட்சியளிக்கிறது. ஆடை அணிகலன்கள் மிகுந்து காணப்படுகிறது. வீரபத்திரரின் வாகனமாகிய ஆடு உடன் காணப்படுகிறது. இச்சிலை சத்தியமங்கலம், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

சுப்ரமணியர்:

இச்சிலை கி.பி. 9 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இச்சிலை நான்கு கைகளை கொண்டு நிற்கும் நிலையில் உள்ளது. வலது மேல்கையில் கத்தியும் இடதுமேல் கையில் சேவலும் காணப்படுகிறது. வலதுகீழ் கை இடுப்பின் மேல் வைக்கப்பட்டுள்ளது. இடதுகீழ்கை மயிலை அணைத்தவாறு உள்ளது. தலையில் மகுடம் காணப்படுகிறது. இச்சிலை சென்னை அருங்காட்சியகத்திலிருந்து பெறப்பட்டது.

பைரவர்:

இச்சிலை கி.பி. 18 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. வலது மேல் கையில் உடுக்கை காணப்படுகிறது. இடது மேல் கையில் பாசக் கயிறு காணப்படுகிறது. வலது கீழ்கையில் சூலமும் இடது கீழ்கையில் கபாலமும் காணப்படுகின்றன. பைரவரது வாகனமாகிய நாய் பின்புறத்தில் காணப்படுகிறது. இச்சிலை உளுந்தூர் பேட்டை வட்டம், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

கலைகலி அம்மி:

இது கி. பி. 14 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. அம்மிக் கல்லின் நான்கு புறத்திலும் கஜலட்சுமி, ஐயனார், பாலகிருஷ்ணர், வினாயகர் ஆகியோர் உருவம்

பொறிக்கப்பட்டுள்ளது. அம்மிக்கல்லைச் சுற்றிலும் யாழியின் உருவமும் காணப்படுகிறது.

## படிமக்கூடம்

செப்புத் திருமேனிகள் தமிழ்நாட்டின் கலை தொன்மையையும் மாண்பையும் எடுத்தோதுகின்றன. சோழப்பேரரசர்கள் காலத்தில் உலகம் வியக்கும் செப்புத் திருமேனிகள் செய்யப்பட்டன. பெரும்பாலும் தெய்வங்களின் உருவங்கள் உலாவருவதற்கென வடிக்கப்பட்டன. தென்னிந்தியச் செப்புச் சிலைககள் பல அளவுகளில் பெரியவைகளாகவும், சிறியவைகளாகவும் உள்ளன. மிகச்சிறந்த கலைவண்ணம் நிரம்பி வழியும் சிலைகள் பெரியதாகவும் கனமாகவும் இருக்கின்றன. அவை பீடங்களில் நிற்கும் நிலையிலும் அமர்ந்திருக்கும் நிலையிலும் உலா வருவதற்கு ஏற்ற வகையில் கயிற்றால் கட்டி தூக்கிச் செல்ல எளிதாக இருக்கும்படி பீடத்தில் ஓட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கூடத்தில் சைவப் படிமங்கள் மற்றும் வைணவப் படிமங்கள் காட்சிக்கு உள்ளன. அவை:–

### சைவப்படிமங்கள்

**கணேசர்:**

இச்சிலை கி.பி. 10 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. நான்கு கைகளுடன் நிற்கும் நிலையில் காணப்படுகிறது. வலது மேல் கையில் பாசக் கயிறு, இடது மேல் கையில் அங்குசம், வலது கீழ் கையில் உடைந்த தந்தம், இடது கீழ் கையில் விளாம் பழத்துடனும் இடையைச் சுற்றி நாகமும் காணப்படுகின்றன. இடதுபுறம் வளைந்து, விளாம்பழத்தை தொடும் நிலையில் தும்பிக்கை உள்ளது. அழகிய வேலைப் பாடுடன் கூடிய பெரிய திருவாசியுடன் கணேசர் காட்சியளிக்கிறார். இச்சிலை தஞ்சை மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

நடராஜர்:

இச்சிலை கி.பி. 11– ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இடது காலைத் தூக்கி வலது காலால் முயலகனை மிதித்து உடுக்கையும், நெருப்பையும் ஏந்தி, அபயமளித்து, திருவாசியின் மத்தியில் ஆடும் நடராஜரின் செப்புத் திருமேனி படிமக் கூடத்திற்கு தனி சிறப்பைச் சேர்க்கிறது. ஆடும் நிலையில் உள்ள நடராஜரின் உருவம் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய செயல்களைக் குறிப்பிடுகிறது. நடராஜரின் வலது மேல் கையில் உள்ள உடுக்கை உலகின் தோற்றத்தையும் அபயம் அளிக்கும் கை காத்தலையும், இடது மேல் கையில் உள்ள நெருப்பு அழித்தலையும் , முயலகன் மீது அமர்ந்த கால் மறைத்தலையும், தூக்கிய கால் முக்தியையும் குறிப்பதாகும். இடது கீழ்கை தூக்கிய காலைச் சுட்டிக் காட்டுகிறது. இந்த நடராஜர் சிலை தஞ்சை மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

திருஞானசம்பந்தர்:

இச்சிலை கி.பி. 11 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. குழந்தை வடிவில் வடிக்கப்பட்டுள்ளது. இடது கை நீட்டிய நிலையிலும், வலதுகை மேலே சுட்டிக் காண்பிக்கும் நிலையிலும் இடதுகால் பீடத்தின்மீது ஊன்றிய நிலையிலும் வலதுகால் சிறிதே மடித்து காணப்படுகிறது. இச்சிலை தென்னாற்காடு மாவட்டம், சிறுகாட்டூரிலிருந்து கிடைத்துள்ளது.

அப்பர்:

இச்சிலை கி.பி.12 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இரு கைகளும் கூப்பிய நிலையில் காணப்படுகிறது. ஆலயங்களில் புறத்தே உள்ள செடி, கொடிகளை வெட்டி சுத்தம் செய்து வந்ததால் மண்வெட்டி போன்ற உருப்பு காணப்படுகிறது. தேவாரம் இவரால் பாடப்பெற்றது. இச்சிலை திருக்கோடிக்காவல் தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

மாணிக்கவாசகர்:

இச்சிலை கி.பி. 12 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

இடது கையில் ஓலைச் சுவடிகளும், வலது கை போதித் தலையும் குறிக்கும் வகையில் இவர் உருவம் வைக்கப்பட்டுள்ளது. எட்டாம் திருமுறைகளாக இவரது பாடல்கள் அமைந்துள்ளன. இச்சிலை காவியமங்கலம், தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

**சோமாஸ்கந்தர்:**

இச்சிலை கி.பி. 11 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. சிவன், பார்வதி அமர்ந்த நிலையில் இருக்க இடையில் முருகன் குழந்தையாக நிற்கின்ற நிலையில் காணப்படுகிறது. இச்சிலை சிறுகாட்டூர், தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து கிடைத்தள்ளது.

**காளி:**

இச்சிலை கி.பி. 10 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. நான்கு கைகளுடன் இரண்டு கோரைப் பற்களுடனும் இடது காலை மடித்து அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. வலது மேல்கையில் சூலம், இடது மேல்கையில் உடுக்கை, வலது கீழ் கையில் கத்தி, இடது கீழ்கையில் கபாலம் ஆகியவற்றை ஏந்தியவாறு காணப்படுகிறது. இச்சிலை கடலூர், தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

**தேவி:**

இச்சிலை கி.பி. 14 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. நிற்கின்ற நிலையில் காணப்படுகின்ற இச்சிலை வலது கை மலரை தாங்கியும் இடதுகை கீழ்நோக்கி தொங்கிய நிலையிலும் காணப்படுகின்றது. இச்சிலை லால்பேட்டை, தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

## வைணவப் படிமங்கள்

**கிருஷ்ணர்:**

இச்சிலை கி.பி. 10 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. நிற்கின்ற நிலையில் காணப்படுகின்ற இச்சிலையின் இடதுகை[ருக்மணி] தோளில் அணைவது போன்றும், வலது கை ஒரு வளை தடியைப் பிடித்துள்ளது போன்றும் காணப்படுகின்றது.

இச்சிலை கல்பட்டு, தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

சத்தியபாமா:

இச்சிலை கி.பி. 16 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. தாமரை பீடத்தில் மேல் நிற்கின்ற நிலையில் உள்ள இச்சிலையின் வலதுகை அல்லிமலருடனும், இடது கை கீழ்நோக்கி தொங்கிய நிலையிலும் காணப்படுகிறது. இச்சிலையின் நெற்றியின் மேல் சூரியன், சந்திரன் வடிவ அணிகலன் உள்ளது. அடுக்கடுக்கான மடிப்புகளுடன் கூடிய ஆடை அலங்காரத்துடன் காணப்படுகிறது. இச்சிலை லால்பேட்டை, காட்டுமன்னார் கோயில் வட்டம், தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

விஷ்ணுவுடன் ஸ்ரீதேவி பூதேவி:

இச்சிலைகள் கி.பி. 15 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. நான்கு கைகளுடன் நிற்கும் நிலையில் விஷ்ணு காணப்படுகின்றது. வலது மேல்கையில் சக்கரமும் இடது மேல்கையில் சங்கும் ஏந்தியுள்ளார். வலது கீழ்கை அபய முத்திரையுடனும், இடது கீழ்கை வரமளிப்பது போன்றும் காணப்படுகின்றது. விஷ்ணுவின் வலதுபுறம் ஸ்ரீதேவியும் இடதுபுறம் பூதேவியும் காணப்படுகின்றன. ஸ்ரீதேவியின் இடதுகையில் தாமரை மலரும், வலது கை கீழ்நோக்கி தொங்கிய நிலையிலும் உள்ளது. பூதேவி வலது கையில் அல்லி மலருடனும், இடதுகை கீழ்நோக்கி தொங்கிய நிலையிலும் காணப்படுகிறது. இச்சிலை வசிஷ்டபுரம் திட்டக்குடி, தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

தேவி:

இச்சிலை கி.பி. 13 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. நிற்கின்ற நிலையில் உள்ள இச்சிலையின் வலது கையில் மலரும், இடதுகை கீழ் நோக்கி தொங்கிய நிலையிலும் காணப்படுகின்றது. இச்சிலை திருப்பாதிரிபுலியூர், தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

இவற்றுடன் இக்கூடத்தில் சிறிய அளவிலான படிமங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவை:

1. அனுமன்
2. பாதுகை
3. பாலகிருஷ்ணர்
4 கிருஷ்ணர்
5. சத்தியபாமா
6. பாலகிருஷ்ணர்
7. விஷ்ணு
8. சக்கரத்தாழ்வார்:

இச்சிலை விஜய நகர காலத்தைச் சார்ந்தது. சக்கரத்தாழ்வார் என்பது விஷ்ணு கையில் உள்ள சக்கரம் மனித உருவில் காட்சியளிப்பது. இச்சிலை எட்டுகோண வட்ட தீச்சுடர் பிரபையில் தாமரை பீடத்தில் நிற்கின்ற நிலையில் உள்ளது. கரண்ட மகுடமும் தீச்சுடர் போன்ற தலைமுடியும் கீழ்நோக்கிய பார்வையும் நீண்ட கூர்மையான மூக்கும் கடைவாயில் இரு நீண்ட கோரைப் பற்களுடனும் எட்டு கைகளுடனும் காட்சியளிக்கிறது. இச்சிலை சங்கு, சக்கரம், அங்குசம், பாசக்கயிறு, பாம்பு, அல்லி மற்றும் தாமரை மலர்களைக் கைகளில் தாங்கிய நிலையில் அழகிய வேலைப்பாடுடன் கூடிய ஆடை அலங்காரத்துடன் காட்சியளிக்கிறது. இச்சிலை உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது.

## நிழற்படக் கூடம்

இக்கூடத்தில் முக்கிய கோயில்கள், ஓவியங்கள், சிற்பங்கள், இயற்கைக் காட்சிகள் ஆகியவை வண்ண நிழற்படங்களாகவும் கருப்பு வெள்ளை நிழற்படங்களாகவும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவை:

1. மலையாளி குடும்பம் – கல்வராயன்மலை, கள்ளக்குறிச்சி.

2. இயற்கை காட்சி – கல்வராயன்மலை, கள்ளக்குறிச்சி.

3. நடராஜர் கோயில் – சிதம்பரம், தென்னாற்காடு மாவட்டம்.

4. கொடிப்பெண் – திருவதிகை, தென்னாற்காடு மாவட்டம்.

5. அருள்மிகு ஒப்பிலாமணி ஈஸ்வரர் திருக்கோயில் – அரகண்டநல்லூர், திருக்கோயிலூர் வட்டம்.

6. கபிலர்குன்று – திருக்கோயிலூர் வட்டம்.

7. கோபுரம் – திருக்கோயிலூர் வட்டம், 16 –ஆம் நூற்றாண்டு

8. சுவர் ஓவியம் – சிதம்பரம் நடராஜர் கோயில், 18 – ஆம் நூற்றாண்டு

9. சிவன் கோயில் – திருவெண்ணைநல்லூர்.

10. மன்னார்ச்சாமி கோயில் – திண்டிவனம்

11. அருள்மிகு ஹயகிரிசுவரர் கோயில் – திருவந்திபுரம், கடலூர் வட்டம்.

12. பாடலீசுவரர் கோயில் – திருப்பாதிரிப்புலியூர், கடலூர் வட்டம்.

## அஞ்சல்தலைக் கூடம்

முதன் முதலில் பறவைகளின் மூலம் செய்தி பரிமாற்றம் செய்யப்பட்டது. பிறகு அஞ்சல்முறை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. அதன்படி வழக்கத்திற்கு தபால்தலைகள் வெளியிடப்பட்டன. இந்தியா மற்றும் மேலைநாட்டு தபால்தலைகள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## மானிடவியல் கூடம்

இக்கூடத்தில் கல் ஆயுதங்கள், முதுமக்கள் தாழி, உறைகிணறு, வெடிமருந்து குப்பிகள், பழங்குடிகளின் பொருட்கள், இசைக் கருவிகள், ஆம்போரா மதுஜாடிகள், சுடுமண் பொம்மை, தோல்பொம்மைகள் ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

**கல் ஆயுதங்கள்:**

பழைய கற்காலத்தில் மனிதன் வேடுவனாகவும்,நாடோடியாகவும், திரிந்துகொண்டு பிராணிகளை வேட்டையாடியும், கிழங்குகளைத் தோண்டி எடுத்தும் காய்கனிகளை புசித்தும் தன்தேவைகளைப் பூர்த்தி செய்தான். அப்போது அவன் உபயோகித்த கற்கருவிகள் கடினமாகவும், கரடு முரடாகவும் சுத்தம் இல்லாமலும் செதுக்கப்பட்டதாகவும் இருந்தன.

புதிய கற்காலத்தில், கரடு முரடான கற்கருவிகளைச் செதுக்கியதோடு இல்லாமல் அவைகளைத் தேவைக்கேற்றவாறு தேய்த்து, வழவழப்பாகவும் செய்யப்பட்டன. கற்கோடாரிகளும், செதுக்கும் கருவிகளும் நல்ல தோற்றம் உள்ளவைகளாகவும் வழவழப்பாகவும் செய்யப்பட்டதுடன் வெட்டும்முனையும் கூர்மையாக ஆக்கப்பட்டது. பல்லாயிர வருடங்கள் கற்கருவிகளைச் செய்ய தேர்ச்சி பெற்றதனால் புதிய கற்காலத்தில் சிறந்த கருவிகளைச் செய்ய கற்கால மனிதன் பழகிக்கொண்டான். வழவழப்பான கற்கோடாரிகள் பழங்கற்கால கோடாரிகளை விட அதிகமாக பல இடங்களில் கிடைத்தமையால் புதிய கற்காலததில் பண்டைய மனித்இனம் தொகையில் அதிகரித்தமையை நாம் உணரமுடிகிறது. புதிய கற்கால மனிதன் உணவு உற்பத்தி செய்யும் தொழிலிலும் ஆடு மாடுகளை வீட்டுவிலங்காகப் பழக்கி, பயன் பெற்றதோடு நிரந்தரமாக இருப்பிடங்களை அமைத்துக்கொண்டு கிராம வாழ்க்கைக்கு அடிகோலினான். இங்கு, பழங்கற்கால கல்ஆயுதங்கள், புதிய கற்கால கல்ஆயுதங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

**முதுமக்கள்தாழி:**

இந்தியாவின் இரும்புகாலம் மிகப் பழமை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இக்காலத்தில் பானை செய்யும் தொழிலும் அதன் உச்ச நிலையை அடைந்திருந்தது. இக்காலத்தில் தென்னிந்தியாவின் மூதாதையர்களுடைய சவஅடக்கத்துடன் தொடர்பு கொண்ட பழக்க வழக்கங்களை நாம் அறிகிறோம். இச்சவ

அடக்கத்தில் அவர்கள் உபயோகித்த பொருட்களும் உடன்வைத்து புதைக்கப்பட்டது. அவ்விதமான முதுமக்கள்தாழி ஒன்று இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**உறைக்கிணறு:**

கடற்கரையை ஒட்டிய நெய்தல் நிலப்பகுதியில் வாழும் மக்கள் குடிநீருக்காக உறைக்கிணற்றை அமைத்துக்கொள்ளும் வழக்கம் இருந்திருக்கிறது. வெளிப்புறத்தைச் சுற்றிலும் செங்கற்கள் அடுக்கப்பட்டிருப்பதால் உறைகிணறுகள் சிதைந்துவிடாமல் உறுதியாக திகழ்கின்றன. சுடுமண்ணால் ஆகிய இவ்வுறைகள் கைகளால் செய்யப்பட்டவையே. உறைகிணறுகள் கோடைக்காலத்தில் நீர்சேமித்து வைக்கும் செயற்கை நீர்த்தேக்கங்களாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்வித கிணற்று உறை ஒன்று இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

வெடிமருந்துக் குப்பிகள்:

போர்க் காலங்களில் வெடிமருந்துகளை பாதுகாப்பாக எடுத்துச் செல்ல பயன்படுத்தப்பட்ட வெடிமருந்துக் குப்பிகள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

பழங்குடிகள் [கல்வராயன்மலை மக்கள்]:

கல்வராயன்மலை மக்கள் மலையாளிகள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் பயன்படுத்திய சில பொருட்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவை கொட்டாங்கச்சி, கரண்டி, கால்நடை கழுத்துமணி, மரத்தாலான விளையாட்டு வண்டி, களைக்கொத்தி, அரிவாள், சுரைக்குடுவை, முறம், வெட்டுக்கத்தி, சிறுகூடை ஆகியவை.

**இசைக்கருவிகள்:**

தென்னிந்திய கோவில் திருவிழாக்களில் பயன்படுத்தப்படுகின்ற கொம்பு, எக்காளம், நாதஸ்வரம், மிருதங்கம், இடுக்கி ஆகிய இசைக்கருவிகள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

**ஆம்போரா ஜாடிகள்:**

பழங்காலத்தில் மத்திய தரைக்கடல் நாடுகள் அனைத்திலும் மது, எண்ணைய் ஆகிய திரவப் பொருட்களைச் சேமித்து வைப்பதற்கும், பாதுகாப்பதற்கும் பயன்படுத்தப்பட்ட ஜாடிகளுக்கு ஆம்போராஜாடிகள் என்று பெயர். இச்ஜாடிகள் ரோமானியர்களால் தமிழகத்திற்கு கொண்டுவரப்பட்டன. தமிழகத்து குயவர்கள் ஆம்போரா ஜாடிகளைப்போன்றே கூர்மையான அடிப்பகுதியும் அகன்ற வாய்ப்பகுதியும் உடைய உள்நாட்டு மதுஜாடிகளைச் செய்துள்ளனர். மேற்புறத்தில் கைப்பிடி இன்றி வளையப்பெற்ற இத்தகைய ஜாடிகள் உள்நாட்டு களிமண்ணால் வளையப்பெற்று மிகவும் திண்மையாக திகழ்கின்றன. மங்கிய சிவப்பு நிறமுடையவையாக காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது. இவை கடலூரில் குடிகாடு என்னும் இடத்திலிருந்து கிடைத்துள்ளது.

**சுடுமண் பொம்மை (குதிரை வீரன்):**

வர்ணம் தீட்டப்பட்ட சிறந்த வேலைப்பாடுடன் குதிரையின் மீது வீரன் அமர்ந்த நிலையில் உள்ள சுடுமண் பொம்மை இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**தோல்பொம்மைகள்:**

தென்னிந்திய கிராமங்களில் தோல் பொம்மைகளின் ''பொம்மலாட்டம்'' ஒரு சிறந்த பொழுது போக்காக இருந்து வந்தது. புராணக்கதைகளில் வரும் பாத்திரங்கள் உருவகப்படுத்தப்பட்டு தோல்பொம்மைகளால் செய்யப்பட்டன. சில மிருகங்களின் தோல்களைக்கொண்டு இப்பொம்மைகள் செய்யப்பட்டன. இங்கு பீஷ்மர், அத்தம்மா, அனுமன் ஆகிய தோல்பொம்மைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## ஓவியங்கள்

**கோடுகளால் அமையும் வடிவத்தை ஓவியம் எனலாம். 'வடிவம்' என்பதற்கு 'அமைப்பு' என்பதே பொருள். ஓவியம்**

வரையப்படும் முறையாலும் பயன்படுத்தப்படும் பொருளாலும் சித்தரிக்கப்படும் நிலையாலும் பலவகைப்படும்.

நீர்வண்ண ஓவியம், எண்ணெய் ஓவியம், சுதை ஓவியம், ஒட்டுநிலை ஓவியம் அல்லது சுவர் ஓவியம் என நான்கு வகையாகப் பாகுபடுத்துவர்.

கருத்தைப் புலப்படுத்தும் முறைகளைக்கொண்டு ஓவியத்தை தன்மை நவிற்சி, (Realism), பதிவு நவிற்சி (Expressionism), கருத்தியல் நவிற்சி (Idealism), கனவடிவ நவிற்சி(Cubism), என நான்கு வகைகளாகவும், பாகுபடுத்தலாம். இவற்றுள் பெரும்பாலும் முதலிரண்டு வகையையே நம்நாட்டு ஓவியக் கலையில் காணமுடிகிறது.

இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள ''பெண்ணும் மிருகமும்'' என்ற ஓவியத்தில், ஓவியர் மனிதனை விலங்குடன் ஒப்பிட்டு காட்டுகிறார். மனிதன் சில நேரங்களில் தனது உணர்வுகள், உணர்ச்சிகளையும் தன் பகுத்தறிவை இழந்து விலங்கிற்கு சமமாகச் செல்கிறான் என்பதை தனது ஓவியத்தின்மூலம் தெரிவிக்கிறார்.

''தேவதை'' என்ற ஓவியத்தில் ஓவியர் மரத்தையும் உலோகத்தையும் இணைத்து, புடைப்போவியமாகப் படைத்து கலைத்திறனை வெளிப்படுத்தியுள்ளார்.

''தேக்கம்'' என்ற ஓவியத்தில் ஓவியர் தனது உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சிகளை அழகிய வண்ணங்களுடன் ஓவியமாக வரைந்துள்ளார்.

''மாதா கோயில்'' என்ற ஓவியத்தில் ஓவியர் ஒரு மாதா கோயிலை பல கோணங்களில் பார்த்தால் எப்படித் தோன்றும் என்ற கருத்துடன் முப்பரிமாண அமைப்புடனும் இலேசான வண்ணங்களைக் கொண்டு ஓவியத்தை வரைந்துள்ளார்.

11924

## நாணயங்கள்

பண்டமாற்று முறையை தவிர்க்க கி. மு. 8 – ஆம் நூற்றாண்டளவில் நாணயங்கள் நடைமுறைக்கு வந்தன. நாணயங்கள் மூலமாக வரலாறு, காலம், கலை, பண்பாடு, ஆட்சிமுறை, தொழில்நுட்பம், செல்வச்சிறப்பு ஆகியவற்றை அறிய முடிகிறது. இங்கு நடைமுறைக்கு வந்த முதல் நாணயமாகிய அச்சுகுத்திய நாணயம் முதல், கிழக்கிந்திய கம்பெனி நாணயம் வரை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## மரச்சிற்பங்கள்

இந்துகோயில் தேர்களை அலங்கரித்த மரச்சிற்பங்கள் பல இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவை, கடந்த நூற்றாண்டைச் சார்ந்தவை. இச்சிற்பங்கள் புராணக் காட்சிகள் மற்றும் இந்து கடவுள்களைக் கொண்டுள்ளவையாக காட்சியளிக்கின்றன.

## கைவினைக்கூடம்

கைவினைப்பொருட்களாகிய மரத்தாலான பொம்மைகள், கல்லில் செதுக்கப்பட்ட சிலைகள், பித்தளை விளக்கு, பேப்பர் பசையினால் ஆன பொம்மைகள் மற்றும் கைத்தறி நெசவில் பயன்படுத்தப்படும் பொருட்கள் ஆகியவை இங்கு காட்சிக்கு வைக்கப்படடுள்ளன.

## இயற்கையியல்கூடம்

இக்கூடத்தில் விலங்கியல், தாவரவியல், புவியியல் காட்சிப் பொருட்கள் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

# விலங்கியல்

அறிவியலார், விலங்குகளைப் பொதுவாக முதுகெலும்பற்றவை, முதுகெலும்புள்ளவை என இருவகையாகப் பிரித்துள்ளனர். முதுகெலும்பற்ற உயிரிகள் நீரிலும் வாழ்வன, நிலத்திலும் வாழ்வன. கடற் பவளங்கள், கடற்பஞ்சுகள், லேம்ப்ரஸ், சபெல்லா, ஹெட்ரோநீரிஸ், மரவட்டை, மட்டுடா, பலானஸ், நண்டு வகைகள், சங்கு வகைகள், நட்சத்திர மீன் ஆகியவை இக்கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

சாரைப் பாம்பு:

சாரைப்பாம்பு ஒரு விஷமற்ற பாம்பு, ஆனால் பார்வைக்கு இது நாகப் பாம்பைப் போன்ற தோற்றமுடையது. படம் எடுக்கும் திறனற்றது.இது எலிகளை அதிகமாக வேட்டையாடி உட்கொள்கிறது . இவ்வகையில் மனிதனுக்கு நன்மை பயக்கிறது. இககாரணத்தினாலேயே ஆங்கிலத்தில் இதை 'ராட் ஸ்நேக்' என்று கூறுகின்றனர். சாரைப் பாம்புகள் ஒன்பது அடி நீளம் வரை வளரக்கூடியவை. அதிகமாக வயல் வெளிகளில் காணப்படும். இதர பாம்பினங்களைப் போல சாரைப் பாம்புகளும் அவற்றின் தோலிற்காக அதிக அளவில் கொல்லப்படுகின்றன. இங்கு காட்சியில் வைக்கப்பட்டுள்ள சாரைப் பாம்பு 7 அடி நீளம் உடையது. கடலூர் குண்டுசாலைப் பகுதியில் இருந்து கிடைக்கப்பெற்றது.

உடும்பு:

இவ்வகை உடும்பு இந்தியாவிலும், ஸ்ரீலங்காவிலும், பர்மாவிலும் காணப்படுகிறது. இது மாமிசப் பட்சிணி. எந்த உயிரினத்தைக் கொன்று சாப்பிட முடியுமோ அதனைச் சாப்பிடும்.

**இதன் உணவு பறவைகள், பறவைகளின் முட்டைகள், சிறிய பாலூட்டிகள், ஊர்வன, மீன்கள்,நண்டுகள் முதலியன. மரத்தில் நன்றாக ஏறும். சில நேரங்களில் உயிரற்றதுபோல் நிலத்தில் கிடந்து பாசாங்கு செய்யும். காயத்தை ஆற்றும் தன்மையினால் இதன் மாமிசம் மருந்து தயாரிக்கப் பயன்படுகிறது.**

**அன்னம்:**

ஐரோப்பிய நாடுகளில் அன்னம் அதிக அளவில் காணப்படுகின்றன. அவை பெரியன. தாவர உணவை உட்கொள்கின்றன. நீரில் வாழ்வன . நீண்ட கழுத்தும், அகன்ற அலகும் உடையன. பால் வேறுபாடு தெரியாது. வெளிரிய வண்ணமுடைய முட்டைகளை தரையில் அமைந்த பெரிய கூடுகளில் இடும். பல அன்ன வகைகளில், இந்த அன்னவகை மட்டும் குளிர் காலத்தில் இந்தியாவிற்கு வருகின்றது. அவை கூட்டமாகவும் தனித்தும் வருகின்றது. அவை நீர்களையும், புல்லையும், மீனையும் உட்கொள்கின்றன. மற்ற அன்ன வகைகளைவிட அமைதியாக இருப்பதால் இவை ஊமை அன்னம் என்று பொருத்தமாக அழைக்கப்படுகின்றது. அன்னம் டயரமா காட்சிப் பெட்டியில் வைக்கப்பட்டுள்ளது.

## பாலூட்டிகள்

பாலூட்டிகள் முதுகுத் தண்டுடைய உயிரிகளில் சிறப்புடையவைகளாகும். பாலூட்டிகள் என்பது குட்டிகள் போட்டு பாலூட்டும் விலங்குகளைக் குறிக்கும். பாலூட்டிகளின் உடல் உரோமங்களால் மூடப்பட்டுள்ளது. பாலூட்டிகள் உருவிலும் அமைப்பிலும் மற்றவகை விலங்குகளைவிட பலவகையான மாற்றங்களைக் கொண்டவை.

**கரடி:**

புலால் உண்ணும் பண்பிற்கேற்ப இவற்றின் பற்கள் அமைந்துள்ளன. இங்கு கரடி டயரமா காட்சிப் பெட்டியில் உள்ளது.

மாதிரிகள்:

தவளை மற்றும் கொசுவின் பருவ வளர்ச்சி தோற்றங்கள் இங்கு மாதிரிகளாக வைக்கப்பட்டுள்ளன.

## தாவரவியல்

மனிதனுடைய அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தாவரங்களும் அவற்றில் இருந்து கிடைக்கும் பொருட்களும் பெரும் பங்கு வகிக்கின்றன. தாவரவியல் காட்சிப் பெட்டியில் சில பகுதி வகைகள், நார்வகைகள மற்றும் பயன்படும் மரவகைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அன்னாசிநார், கற்றாழை நார், பனைநார் மற்றும் தேங்காய்நார் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. நார்கள், கயிறுகள் செய்ய பயன்படுகின்றன.

அக்கலத்தில் மரக்கட்டைகள் வீடு கட்டுவதற்கும் பலவிதமான உபகருவிகள் [பாத்திரங்கள்] செய்வதற்கும் எரிபொருளாகவும் பயன்படுத்தப்பட்டன. நாகரிகம் வளர்ச்சியடைந்ததற்கேற்றவாறு மரக்கட்டைகளின் உபயோகம் பலதரப்பட்ட பொருட்கள், கருவிகள் செய்யுமளவிற்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. ராண்டியா டங்டோரம், யூர்யா சபோனிகா, மெலியோஸ்மா அர்னோடியானா, சைனோமட்ரா ரபிபிலோரா, இனோனான்ட்ரா கன்டோலிகானா ஆகிய மரச் சட்டங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## புவியியல்

**மனிதன் வாழ்வும் வளமும் கற்காலம் முதற்கொண்டு இன்றைய விண்வெளி பயணகாலம் வரை பூமியுடன் தொடர்பு** கொண்டது. இப்புவியில் காணக்கிடைக்கும் **கனிமப் பொருட்களைப்**

பயன்படுத்தும் முறைகளைக் கொண்டே ஒரு நாட்டின் வளமும் முன்னேற்றமும் அமைந்துள்ளது.

பூமியின் பொக்கிஷங்களாக கனிமங்கள், பாறைகள், பாசில்கள் ஆகியவற்றின் சில வகைகள் இங்கு காட்சிப்பெட்டியில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பாசில்கள்:

பழங்காலத்தில் வாழ்ந்த விலங்குகள் மற்றும் தாவரங்களின் உடல்களோ, பாகங்களோ அல்லது அவற்றின் அடையாளங்களோ பூமியில் புதைந்து பாதுகாக்கப்பட்டிருக்கும் பொருட்களை பாசில்கள் எனப்படும். உயிரினங்கள் பாறைகளின் இடையில் இயற்கையாக புகுந்துவிடுவதால் காலாவட்டத்தில் பாசில்களாகிவிகின்றன. அவ்வாறு புதையும் பொருட்கள் சாதாரண அமைப்பு கொண்டதாயின் அப்பொருள் மிகவும் பழமையானது எனவும் சிக்கலான அமைப்பு கொண்டதாயின் சமீபகாலத்தது எனவும் அறிய முடிகிறது. பாசில்களைப்பற்றித் தெரிந்துகொள்வதன் வாயிலாக பாறையின் காலத்தையும் அவ்வுயிரினங்கள் வாழ்ந்த காலத்தின் சீதோஷ்ணநிலையையும் அவற்றின் பரிணாம வளர்ச்சி ஆகியவற்றையும் அறியமுடிகிறது. புவியியல் கூடத்தில் அம்மோனைட் பாசிலும், கல்லாகிய மரத்தின் பாகமும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

அம்மோனைட்:

**இது ஒரு வகையான புதைபடிவமாகும். இவ்வகை புதைப்படிவங்கள் திருச்சி மாவட்டத்தில் உள்ள அரியலூர் என்ற இடத்தில் கிடைக்கின்றன. புவியியல் ரீதியாக இப்புதைப்படிவங்கள் கிரிடேஸியஸ் [72–120 மில்லியன் ஆண்டுகள்] காலத்தைச் சார்ந்ததாகும்.**


கல்லாக மாறிய மரம் திருவக்கரை, விழுப்புரம் இராமசாமி மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது. இவ்வகையான கல்மரம் சாத்தனூரிலும் கிடைக்கிறது.

இக்கூடத்தில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி திறந்தவெளி சுரங்கத்தில் வெட்டி எடுக்கப்படும் காட்சியின் தோற்றம் நிழற்படமாக வைக்கப்பட்டுள்ளது.

*****************



நவநீத கிருஷ்ணன்
கி. பி. 18-ஆம் நூற்றாண்டு



மானிடவியல் காட்சிக்கூடத்தில் உள்ள இசைக்கருவிகள்